ஓம்

ஸ்ரீ பரமாத்மனே நம :

ஆறாவது அத்தியாயம்

அப்பியாச யோகம்

உலகில் தர்மத்தின் பெயரில் பழக்க வழக்கங்கள், பூஜை விதிமுறைகள், சம்பிரதாயச் சடங்குகள் அதிகரிக்கும் போது தீய விளைவுகளை சமனப்படுத்தி ஒரு ஈசுவரனை நிறுவச் செய்து அவனை அடையும் செயல்முறைகளை விளக்க ஏதோ ஒரு மகாபுருஷரின் பிறப்பு தோன்றுகிறது. ஏதும் செய்யாமல் உட்கார்ந்து ஞானி என்று கூறிக்கொள்வது ஸ்ரீ கிருஷ்ணர் காலத்திலும் மிகவும் பிரபலமாக இருந்தது. எனவே இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் இந்தக் கேள்வியைத் தானே நான்காவது முறையாக எழுப்பி, ஞான யோகம், நிஷ்காம கர்மயோகம் ஆகிய இரண்டிற்கும் ஏற்ப கர்மம் செய்துதான் ஆகவேண்டும் என்று கூறுகிறார்.

இரண்டாம் அத்தியாயத்தில் அவர், ''அர்ஜுனா! க்ஷத்திரியர் களுக்கு போரை விடச் சிறந்த நன்மை பயக்கக் கூடிய மார்க்கம் ஏதுமில்லை. இந்தப் போரில் தோற்றாலும் தேவர்களின் நிலை கிடைக்கும். வெற்றி பெற்றாலும் 'மகாமஹிம்' நிலை கிட்டும் என்று நினைத்த வண்ணம் ''நீ போர் செய்! அர்ஜுனா! இந்த அறிவு உனக்காக ஞான யோகத்தின் விஷயத்தில் கூறப்பட்டது. எந்த அறிவு? அதாவது போர் செய் என்கிற

அறிவு ! கை மேல் கை வைத்து உட்கார்ந்து இருத்தல் என்பது ஞான யோகம் ஆகாது. தனது இலாப நஷ்டத்தைத் தானே கணித்து தனது சக்தியை உணர்ந்து மகாபுருஷரைத் தூண்டு கோலாகக் கொண்டு கர்மத்தில் ஈடுபடுவது ஞான யோகமாகும். ஞான யோகத்தில் போர் என்பது இன்றியமையாதது என்று கூறினார். மூன்றாம் அத்தியாயத்தில் அர்ஜுனன், ''பகவானே ! நிஷ்காம கர்மத்தை விட ஞான யோகத்தை நீங்கள் சிறந்ததாகக் கருதும்பொழுது என்னை மட்டும் ஏன் இந்த பயங்கரமான கர்மங்களில் ஈடுபடுத்துகிறீர்கள்?'' என்று கேட்டான்.

அர்ஜுனனுக்கு நிஷ்காம கர்மயோகம் கடினமாகத் தோன்றியது. இதுபற்றி கூறும்பொழுது யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் இந்த இரண்டு முறைகளும் என்னால் கூறப்பட்டவைகள். ஆனால் எந்தப் பாதையில் சென்றாலும் கர்மத்தைத் தியாகம் செய்வது என்பது முடியாத காரியம். கர்மத்தைத் தியாகம் செய்வது என்பது முடியாத காரியம். கர்மத்தைத் தொடங்காததினால் பரம நிஷ்கர்ம சித்தி கிடைக்கும் என்பதோ, ஆரம்பிக்கப்பட்ட செயலைத் தியாகம் செய்வதால் பரம-சித்தி கிடைக்கும் என்பதோ இல்லை. இரண்டு மார்க்கங்களிலும் நியமிக்கப்பட்ட வேள்வியின் உபாயத்தைச் செய்தே ஆக வேண்டும்.

ஞான மார்க்கத்தை விரும்பினாலும், நிஷ்காம கர்ம மார்க்கத்தை விரும்பினாலும் இரண்டிலுமே கர்மம் செய்வது இன்றியமையாதது என்பதை அர்ஜுனன் நன்கு உணர்ந்து கொண்டான். இருப்பினும் ஐந்தாவது அத்தியாயத்தில் பலனைப் பெற எது சிறந்தது? எது எளிதானது என்று அர்ஜுனன் மறுபடியும் கேட்டான். அதற்கு யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறினார் : அர்ஜுனா ! இரண்டுமே பரம நன்மையைக் கொடுக்கும். இரண்டுமே ஒரே இடத்திற்கு எடுத்துச் செல்பவைகள். என்றாலும் ஸாங்க்யத்தை விட நிஷ்காம கர்மயோகம் சிறந்தது. ஏனெனில் நிஷ்காம கர்ம யோகத்தைக் கடைப்பிடிக்காமல் எவனும் சன்யாசி ஆக முடியாது. இரண்டிலுமே கர்மம் என்னவோ ஒன்றுதான். எனவே நியமிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யாமல் எவனும் சன்யாசியாக முடியாது. யோகி ஆக முடியாது. இதில் செல்லும் பயணிகளின் இரண்டு வித நோக்கங்களைப் பற்றி முன்பே எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

அனாஸ்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதி ய:
ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ ச ந நிரக்னிர் ந சாக்ரிய: 1

ஸ்ரீ கிருஷ்ண மகாராஜ் கூறினார் : அர்ஜுனா ! கர்மத்தினால் விளையும் பலனை மனத்தில் கொள்ளாமல் அதாவது கர்மத்தைச் செய்யும் பலனை எதிர்பார்த்துச் செய்யாமல், செய்யத் தகுந்த செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்கிறானோ அவனே சன்யாசியும், யோகியும் ஆவான். அக்னியைத் தியானம் செய்பவனும், செயலைத் தியாகம் செய்பவனும் சன்யாசியாகவோ அல்லது யோகியாகவோ

முடியாது. செயல்கள் பலதரப்பட்டவை. அவைகளில் செய்யத்தகுந்த, நியமிக்கப்பட்ட செயல் சிறப்பானது. அதுதான் வேள்வி உபாயம் – அதன் உண்மையான பொருள் 'ஆராதனை' என்பதாகும். அது ஆராதிக்கும் கடவுளிடம் ஒன்றறக் கலந்துவிடுவதற்கான விதிமுறைகளை எடுத்துக் கூறுகிறது. அதைச் செயலாக்கத்தில் கொண்டு வருதலே கர்மமாகும். யார் அதனைச் செய்கிறானோ அவனே சன்யாசி ஆவான். அவனே யோகி ஆவான். ''நாங்கள் அக்னியைத் தொடுவதில்லை'' என்று கூறி அக்னியைத் தியாகம் செய்பவர்களும், ''எனக்கு கர்மமே கிடையாது, நான் ஆத்ம ஞானி' என்று கூறி கர்மத்தைத் தியாகம் செய்து, கர்மத்தைத் தொடங்காமலும், செய்யத் தகுந்த கர்மத்தைச் செய்யாமலும் இருப்பவன் சன்யாசியுமல்ல, யோகியும் அல்ல. இதுபற்றி மேற்கொண்டு பார்ப்போம்.

யம் ஸந்ந்யாஸமிதி ப்ராஹுர் யோகம் தம் வித்தி பாண்டவ
நஹ்-யஸந்ந்யஸ்த-ஸங்கல்போ யோகீ பவதி கஸ்சன 2

அர்ஜுனா ! 'சன்யாசம்' என்று மற்றவர்களால் கூறப்படுவதை நீ யோகம் என்று தெரிந்துகொள். ஏனென்றால் சங்கல்பங்களைத் தியாகம் செய்யாமல் எந்தப் புருஷனும் யோகியாக ஆக முடியாது. அதாவது ஆசைகளைத் தியாகம் செய்வது இரண்டு மார்க்கங்களில் செல்பவர்களுக்கும் இன்றியமையாதது. அப்பொழுது ''நாம் சங்கல்பம் செய்யவில்லையே, இருந்தாலும் நாம் யோகி-சன்யாசி ஆகிவிட்டேனே என்று கூறுவது எளிது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் அப்படி அல்ல என்கிறார்.

ஆருருக்ஷோர்-முனேர்-யோகம் கர்மகாரண-முச்யதே
யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரண-முச்யதே 3

யோக மார்க்கத்தில் செல்ல விரும்பும் திடமான சிந்தனையுடைய புருஷனுக்கு யோகத்தை அடைய கர்மம் செய்வது காரணம் ஆகிறது. யோகத்தை அனுஷ்டானம் தொடர்ந்து செய்து பலனைக் கொடுக்கும் நிலை வந்ததும் அந்த யோக நிலையில் எல்லா சங்கல்பங்களும் இல்லாமல் போவது காரணம் ஆகிறது. இதற்கு முன்பு சங்கல்ப பிண்டம் நம்மை விடுவதில்லை. மேலும்,

யதா ஹி நேந்த்ரியார்த்தேக்ஷு ந கர்மஸ்வனுஷஜ்ஜதே
ஸர்வஸங்கல்ப-ஸந்ந்யாஸீ யோகாரூடஸ் ததோச்யதே 4

எப்பொழுது மனிதன் புலன்களின் போகங்களில் பற்று வைக்காமலும், கர்மங்களில் பற்று வைக்காமலும் (யோகத்தின் முற்றிய நிலையை அடைந்த பிறகு கர்மம் செய்து தேடுவதற்கு என்ன இருக்க முடியும்? எனவே நியமிக்கப்பட்ட கர்ம ஆராதனைக்கு அவசியமே இருப்பதில்லை. இதனால் அவன் கர்மங்களில் பற்று வைப்பதில்லை) இருக்கிறானோ, அப்பொழுது எல்லா சங்கல்பங்களும் இல்லாமல் போகின்றன. அதுதான் சன்யாசம் அதுதான் யோகநிலை. பாதையின்

சன்யாசம். என்ற பெயரில் தனிப்பட்ட ஒருநிலை இருப்பதில்லை. இந்த யோக நிலையினால் இலாபம் என்ன?

உத்தரே-தாத்மனாத்மானம் நாத்மான-மவஸாதயேத்
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து-ராத்மைவ ரிபு-ராத்மன: 5

அர்ஜுனா! மனிதன் தானாகவே தன்சை சீர்திருத்தி உயர்த்திக் கொள்ள வேண்டும். தனது ஆன்மாவை அதோகதிக்கு ஆளாக்கக் கூடாது. ஏனெனில் ஆன்மாவின் நண்பனும் ஜீவாத்மாதான். பகையும் அதுவேதான். எப்பொழுது பகையாகிறது? எப்பொழுது நட்பாகிறது? இதுபற்றிக் கூறுகிறார்.

பந்து-ராத்மாத்மனஸ்-தஸ்ய யேனாத்மைவாத்மனாஜித:
அனாத்மனஸ்து ஸத்ருத்வே வர்த்தேதாத்மைவ சத்ருவத் 6

ஜீவாத்மா மூலம் மனதும், புலன்களும் கொண்ட உடல் எப்பொழுது வெல்லப்படுகிறதோ அப்பொழுது அது அதற்கு ஜீவாத்மா நண்பனாகிறது. எப்பொழுது மனமும், புலன்களும் கொண்ட உடல் வெல்லப்படுவதில்லையோ அப்பொழுது ஜீவாத்மா தனக்கே பகைவனாகிறது.

இந்த இரண்டு சுலோகங்களிலும் தன் மூலம் தன் ஆன்மாவை மனிதன் எடுத்துக் காட்டாகக் கொள்ளட்டுமென்றும், ஆன்மாவை அதோகதிக்கு ஆளாக்கக் கூடாதென்றும் கிருஷ்ணர் கூறுகிறார். ஏனெனில் ஆன்மாதான் உண்மையான நண்பன் என்று யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் விளக்குகிறார். எப்படி? எவன் மூலம் மனம் உட்பட புலன்களை அனைத்தும் வெல்லப்படுகின்றனவோ அவனுக்கு அவனுடைய ஆன்மா நண்பனாகி, நட்புடன் செயல்பட்டு பரம நன்மையைத் தருகிறது. எவன் மூலம் மனது உட்பட புலன்கள் வெல்லப்படுவதில்லையோ அவனுக்கு அவனது ஆன்மாவே பகையாக மாறி விரோத மனப்பான்மையைத் தந்து கீழ்த்தரமான சிந்தனைகள், துன்பங்கள் ஆகியவற்றின் பக்கம் இழுத்துச் செல்கிறது. இதனால்தான் ஒரு வேளை மக்கள் ''நான்தான் ஆன்மா'' என்று கூறுகிறார்களோ! ''இதை ஆயதங்களால் வெட்ட முடியாது. நெருப்பால் எரிக்க முடியாது. காற்றால் உலர்த்த முடியாது. இது நித்தியமானது. அமுத ஸ்வருபமானது; மாறாதது, நிரந்தரமானது. அத்தகைய ஆன்மா என்னிடம் இருக்கிறது'' என்று கீதையில் எழுதப்பட்டுள்ளது.

'ஆன்மா அதோகதியின் பக்கமும் போகும் என்று கீதையின் வரியின் பக்கம் அவர்களின் கவனம் செல்வதில்லை. ஆன்மாவின் உத்தாரணமும் இருக்கிறது. அதற்கு செய்யத் தகுந்த கர்மத்தைச் செய்யும் உபாயமும் கூறப்பட்டிருக்கிறது. அனுகூலமான ஆன்மாவின் இலட்சணத்தைப் பார்ப்போம்.

ஜிதாத்மன: ப்ரசாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
சீதோஷ்ண-ஸுகது: கேஷு ததா மானாபமானயோ: 7

குளிர் – வெப்பங்களிலும், இன்ப துன்பங்களிலும் எவனுடைய அந்தக்கரணத்தின் விருத்திகள் அல்லது 'செயல்கள்' சாந்த நிலையில் இருகின்றனவோ அத்தகைய சுதந்திர ஆன்மாவுடைய புருஷனில் பரமாத்மா எப்பொழுதும் நிலைத்து நிற்கிறான். அங்கிருந்து விலகுவதில்லை. எவன் மனத்துடன் கூடிய புலன்களை வெல்கிறானோ அவனது செயல் பரம சாந்தியில் பெருகுகிறது. (இதுதான் ஆன்மாவின் முன்னேற்றம் அல்லது உத்தாரணமாகும்) மேலே கூறுகிறார்.

ஜ்ஞான-விஞ்ஞான-த்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:
யுக்த இத்-யுச்யதே யோகீ ஸம-லோஷ்டாஷ்ம-காஞ்சன: 8

எவனுடைய அந்தக்கரணம் ஞான விஞ்ஞானத்தினால் திருப்தியடைகிறதோ, எவனுடைய நிலை உறுதியாக மாற்றமில்லாத விகாரமாக இருக்கிறதோ, எவன் புலன்களை வென்றிருக்கிறானோ, எவனுடைய பார்வை மண், கல், தங்கம் எல்லாவற்றிலும் ஒரே நோக்கத்துடன் சமமாகச் செல்கிறதோ அப்படிப்பட்ட யோகி 'ஒன்றியவர்' (யுக்த) ஆவார். இது யோகத்தின் உச்சநிலை அதாவது உச்ச எல்லையாகும். இதுபற்றி யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் ஐந்தாவது அத்தியாயத்தில் ஏழாவது சுலோகத்திலிருந்து பன்னிரண்டாவது சுலோகம் வரை விவரித்திருக்கிறார். பரமதத்துவ பரமாத்மாவிடம் ஒன்றிணைந்து அதனால் ஏற்படும் அறிவுதான் ஞானமாகும். இஷ்ட தேவதையிட மிருந்து ஒரு அங்குல தூரத்தில் இருந்தாலும், அவரைப் பற்றி அறியும் ஆவல் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதுவரை அவன் அஞ்ஞானியாகத்தான் இருக்கிறான். அந்தத் தூண்டுகோல் எப்படி எங்கும் பரவியிருக்கிறது? எப்படித் தூண்டுதல் தருகிறார்? எப்படி பல ஆன்மாகளுக்கும் ஒரே நேரத்தில் வழிகாட்டுகிறார்? அவர் எப்படி இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலத்தையும் உணர்ந்தவராக இருக்கிறார்? அந்தத் தூண்டு கோலான இஷ்ட தேவதையின் செயல்முறை பற்றிய ஞானம்தான், விஞ்ஞானமாகும். எப்பொழுது இதயத்தில் இஷ்ட தேவதை தோன்றுகிறாரோ அந்த நாளிலிருந்து வழிகாட்டத் தொடங்குகிறார். ஆனால் சாதகனுக்குத் தொடக்க காலத்தில் அது புரிவதில்லை. உச்சக் கட்டத்தில் யோகி அவனது அந்தரங்கச் செயல்முறைகளை பூரணமாக அறிந்து கொள்கிறான். இந்த அறிவுதான் விஞ்ஞானம். யோகத்தில் நிலைத்த அல்லது யோகத்துடன் ஒன்றிய புருஷனின் நிலையை நிரூபணம் செய்து யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் மறுபடியும் கூறுகிறார்.

ஸுஹ்ருன்-மித்ரார்-யுதாஸீந-மத்யஸ்தத்-த்வேஷ்ய-பந்துஷு
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்-விசிஷ்யதே 9

பகவானின் நிலைபெற்ற பிறகு மகாபுருஷர் சம நோக்கும், சமமான உணர்வும் பெற்றவராக இருக்கிறார். அவர் முந்தின சுலோகத்தில் கூறியது போல் எவன் பூரண அறிவு பெற்று பண்டிதனாக இருக்கிறானோ, அவன் கல்வியும் பணிவுமுள்ள பிராமணனிடத்தும், சண்டாளனிடத்தும், பசு, நாய், யானை போன்ற பிராணிகளிடத்தும் சமநோக்கு உடையவனாக இருக்கிறான். அதனை முழுமையாக்குகிறது இந்த சுலோகம். இதயத்தில் உதவி செய்யும் எண்ணத்துடன் உதார குணம் கொண்டவனும், நண்பன், எதிரி, துவேஷி, உறவினர்கள், தர்மாத்மா, பாவிகள் ஆகிய எல்லோரிடமும் சம நோக்கு கொண்டவனுமாகிய அந்த யோகத்துடன் ஒன்றிய புருஷன் மிகவும் சிறந்தவன் ஆகிறான். அவர்களின் காரியங்களில் பார்வை செலுத்தாமல் அவர்களுக்குள் உள்ள ஆன்மாவின் சஞ்சாரத்தில் கவனம் செலுத்துகிறான். அனைவரிலும் அவன் காணும் வித்தியாசம் இதுதான் — சிலர் தாழ்ந்த நிலையில் இருக்கிறார் களென்றால், மற்றும் சிலர் களங்கமற்ற நிலைக்குப் பக்கத்தில் இருக்கிறார்கள். ஆனால் முன்னேற்றம் காணும் சக்தி அனைவரிடமும் ஒன்றேபோல்தான் இருக்கிறது. இங்கு யோகத்துடன் ஒன்றியவரின் இலட்சணங்கள் மறுபடியும் எடுத்துக் கூறப்பட்டன.

யோகத்துடன் ஒன்றியவனாக ஒருவன் எப்படி ஆகிறான்? அவன் வேள்வி எப்படி செய்கிறான்? வேள்வி செய்யும் இடம் எவ்வாறு இருக்கிறது? ஆசனம் எதுவாக இருக்கிறது? எங்ஙனம் உட்கார வேண்டும்? செய்பவரின் மூலம் காக்கப்பட வேண்டிய விதிகள், உணவு, உடை, உறக்கம் - விழிப்பு ஆகியவைகளின் கட்டுப் பாட்டுடன் கர்மத்தை எங்ஙனம் செய்கிறான்? ஆகியவற்றை யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் அடுத்த ஐந்து ஸ்லோகங்களில் விளக்கி, நீங்களும் அங்ஙனம் செய்ய இயலும் என்று கூறினார்.

வேள்வியின் விளைவே நியமிக்கப்பட்ட கர்மம் என்று மூன்றாவது அத்தியாயத்தில் கூறி வேள்வி என்ற பெயரை முதன் முதலில் உச்சரித்தார். நான்காவது அத்தியாயத்தில் வேள்வியின் உருவத்தை விளக்கமாகக் கூறியதோடு, அபானத்தில் பிராணத்தையும், அபானத்தைப் பிராணத்தில் நிலை நிறுத்தலையும் — நிலை நிறுத்தி பிராண - அபானத்தின் செல்லும் கதியைக் கட்டுப்படுத்துவதைப் பற்றியும் விரிவாகக் கூறினார். வேள்வியின் உண்மையான பொருள் ஆராதனை என்றும், அதுவே ஆராதிக்கும் கடவுளுக்கும் நமக்கும் இடையே உள்ள தூரத்தை நிர்ணயிக்கும் உபாயம் என்றும் ஐந்தாவது அத்தியாயத்தில் கூறினார். ஆனால் அதற்கான ஆசனம், இடம், செய்முறை ஆகியவற்றைப் பற்றிய விளக்கம் எஞ்சியிருக்கிறது. அதுபற்றி யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் இங்கு விளக்குகிறார்.

யோகீ யுஞ்ஜீத ஸதத-மாத்மானம் ரஹஸி ஸ்த்தித:
ஏகாகீ யத-சித்தாத்மா நிராசீரபரிக்ரஹ: 10

சித்தத்தை வெல்லும் எண்ணம் கொண்ட யோகி மனம், புலன்கள், உடல் ஆகியவற்றை தன்வயத்தில் கொண்டு சின்றின்ப வாசனை, எண்ணங்களை விடுத்து, ஏகாந்த இடத்தில் தனியே சித்தத்தை (ஆன்மாவை அறியச் செய்யும்) யோகச் செயலில் செலுத்துவார்களா? அதற்கான இடம் எப்படி இருக்க வேண்டும்? ஆசனம் எப்படி இருக்க வேண்டும்?

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திர-மாஸன-மாத்மன:
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜின-குசோத்தரம் 11

சுத்தமான இடத்தில் வெட்டி வேர், மான், புலித்தோல், துணி அல்லது இதுபோன்ற பட்டுத் துணி, கம்பளி, பலகை ஆசனம் இவைகளில் ஏதாவது ஒன்றை விரித்து அதிக உயரமில்லாமலும், மிகவும் தாழ்வாக இல்லாமலும் பார்த்துக் கொண்டு ஆசனத்தைத் தயார் செய்து கொள்ளவும். சுத்தமான இடம் என்பதற்கு பெருக்கித் துடைத்துச் சுத்தம் செய்யப்பட்ட இடம் என்று பொருள். தரையில் ஏதாவது விரிப்பு இருப்பது அவசியம். அது மிருகத்தின் தோலாகவோ, பாயாகவோ, துணியாகவோ, பலகையாகவோ இருக்கலாம். ஆனால் ஒன்றும் விரிக்காமல் வெறும் தரையில் உட்காரக் கூடாது. ஆசனம் இங்குமங்கும் ஆடுவதாக அமையக் கூடாது. தரையிலிருந்து மிகவும் உயரமாகவோ, தரையோடு தரையாகவோ இருக்கக் கூடாது. வணக்கத்திற்குரிய மகாராஜ் அவர்கள் சுமாராக ஐந்து அங்குல உயரமான ஆசனத்தில் அமர்வார். ஒருமுறை பக்தர்கள் சுமார் ஒரு அடி உயரமுள்ள பளிங்கு ஆசனம் ஒன்றை வரவழைத்தனர். மகாராஜ் அவர்கள் ஒரே ஒருநாள் அதில் அமர்ந்தார். பிறகு கூறினார் : ''என்னால் முடியாது, இது மிகவும் உயரமாகி விட்டது''. சாது உயரமான ஆசனத்தில் உட்காரக் கூடாது. அது கர்வத்தைத் தூண்டும். மிகவும் தாழ்வாகவும் உட்காரக் கூடாது. ஏனெனில் அது தாழ்வு மனப்பான்மையை வளர்த்துவிடும். அதனால் நம்மீது நமக்கு வெறுப்பு வரச் செய்யும். உடனே அதை அங்கிருந்து அகற்றி கானகத்தில் இருந்த ஒரு தோட்டத்தில் வைத்தார்கள். அங்கு மகாராஜ் அவர்களும் போவதில்லை. மற்றவர்களும் போவதில்லை. இதுதான் அத்தகைய மகாபுருஷர்கள் செயல்முறை போதனையாகும். எனவே சாதுக்களின் ஆசனம் மிகவும் உயரமாக இருக்கக் கூடாது. ஏனெனில் பூசனை வணக்கம் ஏற்படுவதற்கு முன்பு ஆணவம் அதில் ஏறி உட்கார்ந்து கொள்ளும். இதன் பிறகு,

தத்ரைகாக்ரம் மன: க்ருத்வா-யத-சித்தேந்த்ரிய-க்ரிய:
உபவிச்யாஸனே யுஞ்ஜ்யாத் யோக-மாத்ம விசுத்தயே 12

அந்த ஆசனத்தில் அமர்ந்து (உட்கார்ந்து கொண்டுதான் தியானம் செய்ய வேண்டும் என்பது விதி) மனத்தை ஒருமுகப்படுத்தி சித்தத்தையும், புலன்களின் செயல்களையும் கட்டுப்படுத்தி அந்தக் கரணத்தின் சுத்திக்காக யோகாப்பியாசம் செய்ய வேண்டும். இப்பொழுது உட்காரும் முறையைக் கூறுகிறார்.

ஸமங் காய-சிரோ-க்ரீவம் தாரயன்-னசலம் ஸ்த்திர:
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசஸ்-சானவலோகயன் 13

சரீரத்தையும் அதாவது உடலையும், கழுத்தையும், தலையையும் நேராக அசையாமல் நிலையாக வைத்துக் கொண்டு (ஏதாவது பலகையில் பதிவாக நிற்க வைத்திருப்பதைப் போல்) நேராக உட்கார்ந்து மூக்கின் முன் பாகத்தைப் பார்த்தபடி (மூச்கின் நுனியைப் பார்க்கும்படி கட்டளையில்லை -- நேராக உட்கார்ந்ததும் மூக்கின் முன்பு எங்கு பார்வை படுகிறதோ அங்கு பார்வை நிலைத்து நிற்கட்டும். இடப்பக்கம் வலப்பக்கம் பார்க்கும் எண்ணம் இருக்கக் கூடாது) மற்ற திசைகளில் பார்வையைச் செலுத்தாமல் நிலையாக உட்கார்ந்து, பிறகு

ப்ரசாந்தாத்மா விகதபீர்-ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்த்தித:
மனஸ்-ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: 14

பிரம்மசரிய விரதத்தில் நிலையாக நின்று (சாதாரணமாக பிறப்புறுப்புகளைக் கட்டுப்படுத்துவது பிரம்மசரியம் என்று கூறுவர். ஆனால் மனத்தால் சின்றின்பங்களை நினையாமல், கண்களால் அத்தகைய காட்சிகளைக் காணாமல், தொட்டுணர்வு ஏற்படாமல், காதுகளால் சிற்றின்பத்தைத் தூண்டும் வார்த்தைகளாகக் கேளாமல் இருந்தால் ஒழிய பிறப்புறுப்புகளை தன்வயத்தில் வைக்க முடியாது. பிரம்மசர்யம் என்பதின் உண்மையான பொருள் பிரம்மத்தை அனுஷ்டானம் செய்வதாகும். நியமிக்கப்பட்ட கர்மத்தையும், வேள்வியின் உபாயத்தையும் கடைப்பிடிப்பவன் ஸனாதன பிரம்மத்தில் ஒன்றிணைந்து விடுகிறான். இதைச் செய்யும்பொழுது வெளியுலகத் தொட்டுணர்வையும், மனத்துடன் கூடிய புலன்களின் தொட்டுணர்வையும், வெளியிலேயே விட்டுவிட்டு சித்தத்தை பிரம்ம சிந்தனையில், உள்மூச்சு - வெளிமூச்சில், தியானத்தில் ஈடுபடுத்து வதாகும். மனத்தில் பிரம்மம் இருக்கும்பொழுது வெளி உலக உணர்வு எங்ஙனம் வரும்? வெளியுலக உணர்வு இருந்தால் மனம் எங்கு இருக்கும்? மாற்றம் உடலில் இல்லை, மனத்தின் அலைகளில் இருக்கின்றது. மனம் பிரம்ம அனுஷ்டானத்தில் இருக்கும்பொழுது பிறப்புறுப்புகள் மட்டுமின்றி எல்லாப் புலன்களும் வயத்தில் இருப்பது இயற்கையே. எனவே பிரம்ம அனுஷ்டானத்தில் நிலையாக நின்று) பயமின்றி நல்ல முறையில் சாந்தமான அந்தக்கரணத்தை உடையவன் மனத்தைக் கட்டுக்குள் வைத்து, என்னுள் நிலைத்த சித்தத்துடன், என்னுடைய பாராயணத்தில் நிலைத்து நிற்கிறான். அப்படிச் செய்வதனால் என்ன விளைவு ஏற்படுகிறது?

யுஞ்ஜன்-னேவம் ஸதாத்மானம் யோகீ நியத-மானஸ:
சாந்திம் நிர்வாண-பரமாம் மத்-ஸம்ஸ்த்தா-மதிகச்சதி 15

இவ்வாறு எப்பொழுதும் தன்னையே அந்தச் சிந்தனையில் ஈடுபடுத்திய கட்டுப்பட்ட மனத்தையுடைய யோகி என்னில் உச்சக்

கட்டத்தில் நிலையாக நிற்கும் சாந்தியைப் பெறுகிறான். எனவே நீங்கள் எப்பொழுதும் கர்மத்தில் ஈடுபடுங்கள். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. அடுத்த இரண்டு சுலோகங்களில் பரமானந்தத்தைத் தரும் சாந்தியைப் பெற உடலின் கட்டுப்பாடு, உரிய உணவு, விகாரம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

நாத்யஷ்னதஸ்து யோகோஸ்தி ந சைகாந்த-மனஷ்னத:
ந சாதி ஸ்வப்னசீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன 16

அர்ஜுனா! இந்த யோகம் மிகவும் அதிகமாக உண்பனுக்குக் கிடையாதென்றால், ஒன்றும் உண்ணாதவனுக்கும் கிடையாது. எப்பொழுதும் தூங்குபவனுக்குக் கிடைக்காததென்றால், எந்நேரமும் விழித்துக் கொண்டிருப்பவனுக்கும் கிடைக்காது. பின் யாருக்குக் கிடைக்கும்?

யுக்தாஹார-விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு
யுக்த ஸ்வப்னாவபோதஸ்ய யோகோ பவதி து:க்கஹா 17

தகுந்த உணவு, கர்மங்களுக்கு ஏற்ற செயல், உரிய முறையில் தூங்கி விழிக்கும் நிலை கொண்டவன்தான் துக்கத்தை ஒழிக்கும் இந்த யோகத்தை முழுமையாக முடிக்கிறான். அதிகமான உணவு உண்ணுவதால் சோம்பேறித்தனமும், தூக்கமும், பிரமையும் சூழும். அப்பொழுது சாதனை நடைபெறாது. உணவை அறவே விட்டு விடுவதால் புலன்கள் வலுவிழக்கும். அசையாமல் உட்காருவதற் குரிய சக்தி இராது. வணக்கத்திற்குரிய மகாராஜ் அவர்கள் உணவிலிருந்து ஒன்றரை அல்லது இரண்டு ரொட்டிகளைக் குறைத்துக் குறைத்துச் சாப்பிட வேண்டும் என்று கூறுவார். சாதனைக்கு ஏற்ற அலைதலும் சிறிது களைப்பாறுதலும் அவசியமாகும். ஏதாவது செயலைத் தேட வேண்டும். இல்லையென்றால் இரத்த ஓட்டம் சீராக இராது. வியாதிகள் சூழும். உணவுப் பயிற்சி, ஆயுளுக்கேற்ப தூக்கமும் விழிப்பும் கூடவோ குறையவோ செய்கிறது. மகாராஜ் அவர்கள் கூறுவதுண்டு – யோகி நான்கு மணி நேரம் தூங்க வேண்டும். மற்ற சமயங்களில் விடாமல் சிந்தனையில் ஆழ்ந்திருக்க வேண்டும். பிடிவாதமாகத் தூங்காமல் இருப்பவர்களுக்கு பைத்தியம் பிடிக்கும். கர்மத்திற்கேற்ற செயலாக இருக்க வேண்டும். அதாவது நியமிக்கப்பட்ட கர்ம ஆராதனைக்கு ஏற்ப எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டேயிருக்க வேண்டும். வெளி விஷயங்களைப் பற்றி உணர்வு இல்லாமல் எப்பொழுதும் யோகத்தில் ஈடுபட்டிருப் பவனுக்கு யோகம் சித்தியாகிறது. தொடர்ந்து கூறுகிறார் :

யதா விநியதம் சித்த-மாத்மன்யே-வாவதிஷ்ட்டதே
நி:ஸ்ப்ருஹஸ் ஸர்வகாமேப்ப்யோ யுக்த இத்யுச்யதே ததா 18

இவ்வாறு யோகத்தின் பயிற்சியின் மூலம் நல்ல முறையில் வயத்தில்

கொண்டு வரப்பட்ட சித்தம் எப்பொழுது பரமாத்மாவில் நன்கு நிலைத்து நிற்கிறதோ ஒன்றிவிடுகிறதோ அப்பொழுது எல்லா ஆசைகளும் நீங்கப்பெற்ற அந்தப் புருஷனை யோகத்துடன் கூடியவன் என்று கூறப்படுகிறது. சிறப்பு முறையில் வெற்றி பெறப்பட்ட சித்தத்தின் இலட்சணங்கள் யாவை?

யதா தீபோ நிவாதஸ்த்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா
யோகினோ யத-சித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மன: 19

எப்படி காற்று இல்லாத இடத்தில் எரியும் விளக்கு ஆடாமல் அசையாமல் இருந்து அதன் ஒளி நடுக்கமின்றி ஒரே சீராக, மேல் நோக்கிச் செல்கிறதோ அதேபோன்று பரமாத்மாவின் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் யோகிகளின் கட்டுக்கடங்கிய சித்தமும் ஒரே சீராக சஞ்சலமின்றி இயங்குகின்றது. விளக்கு என்னவோ உதாரணம்தான். இந்நாளில் எண்ணெயில் எரியும் விளக்கின் உபயோகம் அதிகமில்லை. ஊதுபத்தியைக் கொளுத்தியதும் அதிக அளவில் காற்றில்லாதபொழுது அதன் புகை ஒரே சீராக மேல் நோக்கிச் செல்கிறது. இது யோகியின் கட்டுக்கடங்கிய சித்தத்திற்கான உதாரணம் மட்டுமேயாகும். இப்பொழுது சித்தம் கட்டுக்குள் அடங்கியும் வசப்பட்டும் உள்ளது. ஆயினும் சித்தம் இன்னமும் இருக்கிறது. எப்பொழுது வயத்திற்குட்பட்ட சித்தமும் ஒன்றிவிடுகிறதோ அப்பொழுது என்ன மகிமை கிட்டுகிறது? என்பதைப் பார்ப்போம்.

யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோக ஸேவயா
யத்ர சைவாத்ம-னாத்மானம் பஸ்யன்-னாத்மனி துஷ்யதி 20

யோகியின் பயிற்சியினால் (பயிற்சி இல்லாவிட்டால் சித்தம் கட்டுக்குள் அடங்காது என்பதினால்) கட்டுப்பட்ட சித்தமும் மறைந்து, புலப்படாமல் போகும் நிலையில் தனது ஆன்மாவின் மூலம் பரமாத்மாவைப் பார்த்தபடி தனது ஆன்மாவிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் நிலை, தனது ஆன்மாவினாலேயே ஒருவனுக்குக் கிட்டுகிறது. ஏனெனில் ஒன்றிணைக்கும் நேரத்தில் பரமாத்மாவின் தரிசனம் கிடைக்கிறது. ஆனால் அடுத்த கணமே தனது ஆன்மாவிலேயே ஈஸ்வரத்தன்மை நிறைந்திருப்பதை அவன் காண முடிகிறது. பிரம்மம் அழியாதது. சமத்துவம் வாய்ந்தது. நிலையானது, புலப்படாதது, அமுத உருவானதென்றால் ஆன்மாவும் அழியாதது, சமத்துவம் பெற்றது. கண்ணுக்குப் புலப்படாதது. அமுத வடிவானது. அத்துடன் கூட சிந்தனைக்கும் அப்பாற்பட்டது. ஏனெனில் சித்தமும், சித்தத்தின் அலைகளும் மோதுகின்றவரை ஆன்மாவின் ஸ்வரூபத்தை (உருவத்தை) அறிய முடியவில்லை. சித்தத்தை வயப்படுத்தி, கட்டுப்பட்ட சித்தத்தைத் அறிந்ததும் பரமாத்மாவின் தரிசனம் கிடைக்கிறது. தரிசனம் கிடைத்த அக்கணமே தெய்வத் தன்மை பொருந்திய குணங்களைக் கொண்ட

ஆன்மாவின் உருவத்தை அறிந்து கொள்கிறான். எனவே தனது ஆன்மாவிலேயே அவன் மகிழ்ச்சியடைகிறான். அதுதான் அவனுடைய உண்மையான உருவம். இதுதான் உச்ச வரம்பு, இதற்கு உறுதுணையாக அடுத்த ஸ்லோகத்தைப் பார்ப்போம் –

ஸுக-மாத்யந்திகம் யத்தத் புத்தி-க்ராஹ்ய-மதீந்த்ரியம்
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்திதஸ் சலதி தத்வத: 21

புலன்களுக்கு அப்பாற்பட்ட சுத்தமான, நுட்பமான அறிவு மூலம் ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவில்லா ஆனந்த நிலையை அவன் எப்பொழுது அனுபவபூர்வமாக அறிகிறானோ அத்தகைய நிலையில் ஊன்றி நிற்கும் யோகி பகவானது உருவத்தைத் தத்துவம் மூலம் அறிந்து சஞ்சலமற்ற நிலையில் அதிலேயே வேரூன்றி விடுகிறான். பிறகு,

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத:
யஸ்மின் ஸ்த்திதோ ந து:கேன குருணாபி விசால்யதே 22

அதற்கு மேற்பட்ட நிலை ஒன்றுமில்லை என்ற அளவில் உச்சத்தின் எல்லையிருக்கும் சாந்தியையும் பரமேஸ்வரப் பிராப்தம் என்ற இலாபத்தையும் பெற்று, அந்த பகவானின் உருவத்தைப் பெற்ற நிலையில் நிலைத்து நிற்கும் யோகி மிகப்பெரிய துக்கத்தினால் கூட சஞ்சலம் அடையமாட்டான். துக்கத்தை அவன் உணர்வதில்லை. ஏனெனில் துக்கத்தை உணரச் செய்யும் சித்தம் ஏற்கனவே மறைந்து விட்டது. இதுபோன்று

தம் வித்யாத்து:க-ஸம்யோக-வியோகம் யோகஸம்ஜ்ஞிதம்
ஸ நிஸ்சயேன யோக்தவ்யோ யோகோ நிர்விண்ண சேதஸா 23

எந்த உணர்வு உலகின் கூடுதல் — பிரிதல் என்ற இரண்டு நிபந்தனைகளையும் தாண்டி நிற்கிறதோ அதுதான் யோகம்; எது அளவிடற்கரிய சுகமாக இருக்கிறதோ அதைப்பெறும் அந்நிலைதான் யோகம்; எதை பரம தத்துவ பரமாத்மா என்று கூறுகிறோமோ அதை அடைவதற்குப் பெயர்தான் யோகமாகும். சஞ்சலமடையாத சித்தத்துடன் நிச்சயிக்கப்பட்ட கடமையைச் செய்வதுதான் அந்த யோகம். தைரியத்துடன் அதில் ஈடுபடுபவன்தான் யோகத்தில் வெற்றி பெறுகிறான்.

ஸங்கல்ப ப்ரபவான் காமான்ஸ்-த்யக்த்வா ஸர்வானஸேஷத:
மனஸை-வேந்த்ரிய-க்ராமம் விநியம்ய ஸமந்தத: 24

எனவே, சங்கல்பத்திலிருந்து உற்பத்தியாகும் எல்லா ஆசைகளையும் சிற்றின்ப போகத்தினையும் பற்றையும் நிரந்தரமாகத் தியாகம் செய்து மனத்தின் மூலமாக புலன்களின் கூட்டத்தை எல்லாப் பக்கத்திலிருந்தும் வயப்படுத்தி,

ஷனை: ஷனை-ருபரமேத் புத்த்யா த்ருதி-க்ருஹீதயா
ஆத்ம-ஸம்ஸ்த்தம் மன: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் 25

படிப்படியாக பயிற்சி செய்து தைரியத்தைப் பெற வேண்டும். சித்தத்தைக் கட்டுப்படுத்தி தைரியத்துடன் கூடிய அறிவுடன் மனத்தைப் பரமாத்மாவிடம் ஒன்றிடச் செய்து மற்ற சிந்தனைகளை விலக்க வேண்டும். இடையறாது ஈடுபட்டுப் பெறுவதற்குரிய விதி உண்டு. ஆனால் ஆரம்பத்தில் மனம் இதில் ஈடுபடாது -- இதுபற்றி யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார் --

யதோ யதோ நிஸ்சரதி மனஸ்-சஞ்சல மஸ்த்திரம்
ததஸ்-ததோ நியம்யைத-தாத்மன்யேவ வஷம் நயேத் 26

நிலையில்லாத சஞ்சலமான இந்த மனம் எக்காரணங்களால் உலக விஷயங்களில் சிக்கித் தடுமாறுகிறதோ, அக்காரணங்களை நீக்கி மறுபடியும் மறுபடியும் அந்த பரமாத்மாவில் நிலை நிறுத்தச் செய்ய வேண்டும். மனம் எங்கெல்லாம் செல்கிறதோ அங்கெல்லாம் செல்ல விடு. ஏனெனில் அது செல்வதோ படைப்பின் பக்கமாக உள்ளது. அந்தப் படைப்பும் பிரம்மத்தின் உள்ளடக்கம். எனவே படைப்பில் வலம் வருவது என்பது பிரம்மத்திற்கு அப்பாற்பட்ட விஷயமல்ல. இவ்வாறு மக்கள் கூறுவதுண்டு. ஆனால் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணரின் கருத்துப்படி இது தவறானதாகும். இம்மாதிரியான கருத்துகளுக்கு கீதையில் கொஞ்சம் கூட இடமில்லை. மனம் எங்கெங்கு செல்கிறதோ, எவைகளின் வழியாகச் செல்கிறதோ, அவ்வழிகளைத் தடுத்து நிறுத்தி பரமாத்மாவில் மனத்தை ஈடுபடுத்த வேண்டும். அதனால் மனத்தை வயப்படுத்த முடியும். இந்தக் கட்டுப்பாட்டினால் என்ன பயன்?

ப்ரசாந்த-மனஸம் ஹ்யேனம் யோகினம் ஸுகமுத்தமம்
உபைதி சாந்தரஜஸம் ப்ரஹ்மபூத-மகல்மஷம் 27

எவனுடைய மனம் பூரணமாக சாந்தியைத் தழுவுகிறதோ, அவன் பாவத்திலிருந்தும் ரஜோ குணத்திலிருந்தும் விடுபடுகிறான். ரஜோ குணத்தை அடக்கி சாந்தி நிலையைப் பெறும் ஒருமுகப்பட்ட யோகிக்கு எல்லாவற்றிற்கும் மேன்மையான ஆனந்தம் கிடைக்கிறது. இதை வலியுறுத்தி மேலும் கூறுகிறார்.

யுஞ்ஜன்-னேவம் ஸதாத்மானம் யோகீ விகதகல்மஷ:
ஸுகேன ப்ரஹ்ம-ஸம்ஸ்பர்ஷமத்யந்தம் ஸுகமஷ்னுதே 28

பாவமற்ற யோகி இவ்விதமான ஆன்மாவை இடையறாது பரமாத்மாவில் லயிக்கச் செய்து சுகம் நிறைந்த பரப்பிரம்ம பரமாத்மாவை அடைந்த பிறகு எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறான். பிரம்மத்தைத் தொட்டுப் பார்ப்பதோடு அதில் ஒன்றிணைந்து விட்ட பிறகு

எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறான். எனவே வணங்குதல் அல்லது பஜித்தல் இன்றியமையாதது. இதுபற்றி மேலும் கூறுகிறார்.

ஸர்வபூதஸ்த்த-மாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சன: 29

யோகத்தின் பலனைப் பெற்று எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் நோக்குடைய யோகி, ஆன்மா எல்லாப் பிராணிகளிலும் பரவியிருப்பதையும் எல்லா ஜீவன்களிலும் பெருக்கெடுத்திருப் பதையும் பார்க்கிறான். அப்படிப் பார்ப்பதனால் என்ன பயன்?

யோ மாம் பஸ்யதி ஸர்வத்ர ஸர்வஞ்ச மயி பஸ்யதி
தஸ்யாஹம் ந ப்ரணஷ்யாமி ஸ ச மே ந ப்ரணஷ்யதி 30

எவன் எல்லா ஜீவன்களிலும் நிறைந்திருக்கும் பரமாத்மாவாகிய என்னைக் காண்கிறானோ எல்லாப் பிராணிகளையும் பரமாத்மாவாகிய என்னுள்ளே இருப்பதாகக் காண்கிறானோ அவனுக்கு நான் புலப்படாதவனாக இருப்பதில்லை. அவன் எனக்குப் புலப்படாதவனாக இருப்பதில்லை. இது உறுதியான, உறுதுணையான, எதிரெதிரில் காணும் சந்திப்பும் நட்பும், நெருக்கமும் நிறைந்த முக்தி நிலையாகும்.

ஸர்வபூத-ஸ்த்திதம் யோ மாம் பஜத்-யேகத்வ-மாஸ்த்தித:
ஸர்வதா வர்த்தமானோபி ஸ யோகீ மயி வர்த்ததே 31

எவனொருவன் வேற்றுமைக்கு அப்பாற்பட்டு மேற்கூறிய ஒருமைப்பாட்டு உணர்வோடு பரமாத்மாவாகிய என்னை பூஜிக்கிறானோ அத்தகைய யோகி எல்லாவிதமான காரியங்களிலும் ஈடுபட்டபடியே என்னிலும் ஈடுபடுகிறான். ஏனெனில் நானில்லாத ஒரு பொருள் அவனுக்கு இருப்பதில்லை. அவனிருக்கும் எல்லாமே நான்தான். எனவே அவன் எழுந்தாலும், உட்கார்ந்தாலும் வேறு எதைச் செய்தாலும் என்னுடைய சங்கல்பத்திலேயே செய்கிறான்.

ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பஷ்யதி யோர்ஜுன
ஸுகம் வா யதி வா து:க்கம் ஸ யோகீ பரமோ மத: 32

அர்ஜுனா! எந்த யோகி தன்னைப்போல் எல்லாப் பிராணிகளையும் நினைக்கின்றானோ, தன்னையே அனைத்திலும் காண்கிறானோ, சுகம், துக்கம் இரண்டிலுமே சமநிலையை உடையவனாக இருக்கிறானோ அத்தகைய யோகி (எவனுடைய பேத பாவம் கழிந்து விடுகிறதோ) மிக்க சிறந்தவனாக கருதப்படுகிறான். கேள்வி நிறைவடைந்தது. இதுபற்றி அர்ஜுனன் கேட்கத் தொடங்குகிறான்.

அர்ஜுனன் கூறுகிறான் :

யோயம் யோகஸ்-த்வயா ப்ரோக்த: ஸாம்யேன மதுஸூதன
ஏதஸ்யாஹம் ந பஷ்யாமி சஞ்சலத்வாத் ஸ்த்திதிம் ஸ்த்திராம் 33

மதுசூதனா! சமத்துவ உணர்வு நோக்கு பெறும் யோகத்தைப் பற்றி தாங்கள் கூறினீர்கள். ஆனால் மனம் சஞ்சலம் அடையும் பொழுது நீண்ட நேரம்வரை இந்த சஞ்சலம் நிறைந்த மன நிலையில் நான் என்னைக் காண்பதில்லை.

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்-த்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் 34

கிருஷ்ணா! தான் என்ற சுபாவத்தைக் கொண்டது இந்த சஞ்சல மனம். (மற்றவர்களை வதைக்கும் தன்மையுடையது) பிடிவாத குணத்துடன் பலம் பொருந்தியதுமாகும். எனவே இதனை தன் வயத்தில் கொண்டு வருவது, காற்றை தன் வயத்தில் கொண்டு வருவது போன்ற இயலாத காரியமாகும். சுழற்காற்றைக் கட்டுப் படுத்துவதும் இதனைக் கட்டுப்படுத்துவதும் ஒன்றாகும். இதுபற்றி யோகேஷ்வரர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறினார் :

ஸ்ரீ பகவான் கூறுகிறார் :

அஸம்ஷயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம்
அப்ப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே 35

பெரிய காரியத்தைச் செய்யும் முயற்சியில் ஈடுபடுபவனே ! அதாவது நீண்ட தோள்களை உடைய அர்ஜுனா ! மனம் சஞ்சலமானது என்பதிலும் அதை தன் வயத்தில் கொண்டு வருவது கடினம் என்பதிலும் சந்தேகமேயில்லை. ஆனால் குந்தி மகனே ! பயிற்சி பயில்முறையாலும், வைராக்கியத்தாலும் இதை தன் வயப்படுத்த முடியும். எங்கு சித்தத்தை நிலை நிறுத்த வேண்டுமோ, அங்கு நிலையாக்குவதற்காக மறுபடியும் மறுபடியும் செய்யும் முயற்சிதான் பயிற்சியாகும். பார்க்கும் — கேட்கும் பொருள்களில் (உலகம், சொர்க்கம் ஆகிய இடங்களில் உள்ள யோகங்கள்) பற்றை அல்லது ஈடுபாட்டைத் துறப்பதுதான் வைராக்கியமாகும். மனத்தை தன்வயப்படுத்துவது கடினம். ஆனால் பயிற்சி (அப்பியாசம்) வைராக்கியம் ஆகியவைகள் மூலம் இது வசப்படுகிறது என்று யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

அஸம்யதாத்மனா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி:
வஸ்யாத்மனா து யததா ஷக்யோ வாப்து-முபாயத: 36

அர்ஜுனா! மனத்தைக் கட்டுப்படுத்தாத மனிதனுக்கு யோகம் கிடைப்பது கடினம். ஆனால் மனத்தை வயப்படுத்தி முயற்சி செய்யும் மனிதனுக்கு யோகம் மிகவும் சுலபம். அதுதான் என் கருத்து. நீ நினைப்பதுபோல் அது அத்தனை கடினமல்ல. எனவே இதைக் கடினம் என்று எண்ணி விட்டுவிடாதே. முயற்சியுடன் ஈடுபட்டு யோகத்தைப்

பெற்றுக்கொள். ஏனெனில் மனத்தை தன் வயப்படுத்தி விட்டால் யோகம் சுலபமாகும். இதுபற்றி அர்ஜுனன் கேட்டான்.

அர்ஜுனன் கூறுகிறான்

அயதி: ச்ரத்தயோபேதோ யோகாச்-சலிதமானஸ:
அப்ராப்ய யோக-ஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி 37

யோகம் பலமுறை செய்து எவனுடைய மனம் சஞ்சலப் படுகிறதோ அவனுக்கு அந்த யோகத்தில் சிரத்தை இருந்தபோதிலும் அந்த மனிதன் தெய்வசித்தி அடையாமல் எந்த கதியை அடைகிறான்?

கச்சின்னோபய-விப்ரஷ்டட்டஸ் சின்னாப்ப்ர-மிவ நஷ்யதி
அப்ரதிஷ்ட்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண:பதி 38

நீண்ட தோள்களை உடைய ஸ்ரீ கிருஷ்ணா! தெய்வத்தன்மை பெறுவதற்குரிய மார்க்கத்தை விட்டு விலகிச் செல்லும் மோகத்திற்கு ஆளான அந்த மனிதன் சிதறிக் கிடக்கும் மேகங்களைப் போல் இரு தரப்பிலும் இழப்பைப் பெறமாட்டானா? சின்னஞ்சிறு மேகம் வானத்தில் தனித்து நிற்கும்போது அது மழை பொழியவும் செய்யாது. மற்ற மேகக் கூட்டங்களில் சேரவும் முடியாது. காற்றால் இங்குமங்கும் அடித்துச் செல்லப்பட்டு கலைந்து விடுகிறது. அதுபோல் உறுதியில்லாத முயற்சியுடையவன் சிறிது காலம்வரை சாதனை செய்தும் மேலே போகமுடியாமல் நிற்பவன் நஷ்டமடைய மாட்டானா? அவன் தன்னில் ஒன்றிணையாமலும் போகத்தையும் அனுபவிக்காமலும் என்ன கதியை அடைவான்?

ஏதன்மே ஸம்ஷயம் க்ருஷ்ண சேத்து-மார்ஹஸ்யஸேஷத:
த்வதன்ய: ஸம்ஷயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே 39

கிருஷ்ணா! என்னுடைய இந்த சந்தேகத்தை தீர்த்துவைக்க உங்களால்தான் முடியும். உங்களைத் தவிர வேறு எவராலும் இந்த சந்தேகத்தைத் தீர்த்து வைக்க முடியாது.

இதுபற்றி யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

ஸ்ரீ பகவான் கூறுகிறார்

பார்த்த நைவேஹ நாமுத்ர விநாஷஸ்-தஸ்ய வித்யதே
ந ஹி கல்யாணக்ருத் கஸ்சித் துர்க்கதிம் தாத கச்சதி 40

அர்ஜுனா! அழியும் இந்த உடலையே இரதமாக்கி இலட்சியத்தை நோக்கி நடைபோடு. அத்தகைய மனிதன் இந்த உலகத்தில் மட்டுமில்லாமல் பரலோகத்திலும் இழப்பை அடைய மாட்டான். ஏனென்றால் நண்பா! அந்த பரம நன்மையுடைய நியமிக்கப்பட்ட கர்மத்தைச் செய்பவன் துர்கதியை அடைவதில்லை. அவன் நிலை என்ன?

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகா-னுஷித்வா சாஷ்வதீ: ஸமா:
சுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ப்ரஷ்டோ பிஜாயதே 41

சஞ்சலமான மனம் காரணமாக யோகத்தினின்றும் விலகிய அந்த மனிதன் புண்ணியவான்களின் உலகத்தில் சிற்றின்பங்களைப் போகம் செய்து (எந்த சிற்றின்பங்கள் காரணமாக அவன் யோகத்தி லிருந்து விலகினானோ, பகவான் அவர்களுக்கு அந்த சிற்றின்பங் களையே காணும்படியும், கேட்கும்படியும் செய்கிறார். அவைகளை அனுபவித்தபடி) சுத்தமான அனுஷ்டானங்களையுடைய உத்தம புருஷர்களின் வீட்டில் பிறக்கிறார். (சுத்தமான அனுஷ்டானங்களை உடையவனே 'சீமான்' ஆவான்).

அதவா யோகினா-மேவ குலே பவதி தீமதாம்
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருசம் 42

அங்கு பிறக்காவிட்டால் நிலையான அறிவுடைய யோகிகளின் கூட்டத்தில் நுழைகிறான். சீமான்கள் வீட்டில் புனித ஸம்ஸ்காரங்கள் சிறுவயதிலிருந்தே கிடைக்கின்றன. ஆனால் அங்கு பிறக்க முடியாவிட்டால் யோகிகள் கூட்டத்தின் (வீட்டில் அல்ல) சீடப் பரம்பரையில் நுழைகிறான். கபீர், துளசி, ரயிதாஸ், வால்மீகி போன்றவர்களுக்கு சுத்தமான அனுஷ்டானங்கள் உள்ள சீமான்கள் வீட்டில் பிறப்பு கிடைக்காவிட்டாலும் யோகிகளின் சகவாசம் கிடைத்தது. சத்குருவின் குலத்தில் நுழைந்து ஸம்ஸ்காரங்களில் மாற்றம் ஏற்படுவதும் ஒரு பிறப்பிற்கு சமானமாகும். அத்தகைய பிறப்பு உலகில் நிச்சயமாக அரிதாகும். யோகிகளின் வீட்டில் பிறப்பு என்பதற்கு அவர்களின் உடல் மூலம் உற்பத்தியாகும் மகன் என்பது பொருள் அல்ல. வீட்டைத் துறப்பதற்கு முன்பு பிறக்கும். மகன்கள் மோகத்தின் காரணமாக மகாபுருஷரைத் தங்கள் தந்தை என்று கருதினாலும் மகாபுருஷரின் நிலை அடைந்தவர்களுக்கு வீட்டைப் பற்றிய உறவு ஏதும் இருப்பதில்லை. எந்த சீடர்கள் அவர்களது மரியாதையைக் காப்பாற்றுகிறார்களோ அவர்கள் மகன்களை விட பன்மடங்கு சிறப்புப் பெற்றவர்கள் ஆவார்கள். அவர்களே அந்த மகாபுருஷர்களின் உண்மையான மகன்கள் ஆவர்.

எவர்கள் யோகத்தின் சம்ஸ்காரங்களை உடையவர்களாக இல்லையோ அவர்களை மகாபுருஷர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. வணக்கத்திற்குரிய மகாராஜ் அவர்கள் துறவிகளை உண்டுபண்ணு வாரேயாயின் ஆயிரக் கணக்கான விரக்திபடையவர்கள் அவரின் சீடர்கள் ஆகியிருப்பார்கள். ஆனால் அவர் சிலருக்கு வழிச் செலவு பணம் கொடுத்தும், சிலருக்கு வீட்டிற்கு ஆள் அனுப்பியும், கடிதம் அனுப்பியும், அறிவுரை கூறியும் அனைவரையும் அவரவர் வீட்டிற்கு அனுப்பி விடுகிறார். பலர் பிடிவாதம் பிடித்தபொழுது அதை அபசகுனமாகக் கருதியும், அவர்களில் உண்மையான யோகி ஆகும் தன்மை இல்லை

என்பதையும், அவர்கள் ஒருபொழுதும் இதில் தேறமாட்டார்கள் என்பதையும், அவர்களை வைத்துக் கொள்வதில் நன்மை இல்லை என்பதையும் தன் உள் மனத்தால் கண்டு கொண்டு அவர்களை அனுப்பி வைப்பார். தனது ஆசை நிறைவேறாத காரணமாக ஒன்றிரண்டு பேர் மலையிலிருந்து கீழே விழுந்து உயிர் நீத்தனர். எனினும் மகாராஜ் அவர்கள் அத்தகையோரை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்பு விஷயம் தெரிந்ததும் ''அவர்கள் குறை உடையவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆனால் அவர்கள் இறப்பார்கள் என்று தெரிந்திருந்தால் அவர்களை வைத்துக் கொண்டிருப்பேன். பவித்திரமற்றவர்களாவும் இருந்தனர். பதிதர்களாகவும் (பிழை செய்தவர்) மாறினர்'' என்று கூறினார். அவர்களின் ஆணவம் பயங்கரமாக இருந்தது. எனவே வைத்துக் கொள்ளவில்லை.

''இன்று ஒரு யோகத்திலிருந்து தவறியவன் வருகிறான். அவன் பிறவி பிறவியாக அலைந்து கொண்டிருக்கிறான். அவன் இத்தகைய உருவம் கொண்டவன் என்றும், அவனது பெயர் இன்னதென்றும், அவனை வைத்துக்கொண்டு பிரம்ம வித்தையைக் கற்றுக் கொடுத்து அவனை முன்னேற்று'' என்றும் கட்டளை வந்ததும் அத்தகையோர் ஆறேழு பேர்களை அவர் வைத்துக் கொண்டார். இன்றும் அவர்களில் ஒருவர் மகாபுருஷராகி தாரகுண்டியில் இருக்கிறார். மற்றொருவர் அனுஸூயியாவில் இருக்கிறார். இன்னும் இரண்டு மூன்று பேர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சத்குருவின் குலத்தில் இடம் கிடைத்தது. அத்தகைய மகா புருஷர்களைப் பெறுவது கடினம்''.

தத்ர தம் புத்தி-ஸம்யோகம் லபதே பௌர்வ-தேஹிகம்
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன 43

அங்கு அந்த புருஷர்கள் உடலால் சாதனை செய்து அறிவின் இணைப்பையும் பெறுகிறார்கள். அதாவது முற்பிறவியில் செய்த சாதனைகளை அப்படியே இந்தப் பிறவியில் பெற்று விடுகிறார்கள்.

குந்தி மகனே! இந்தச் சிறப்பின் காரணமாக அவன் மறுபடியும் தெய்வ நிலை என்ற பரம சித்திக்காக முயற்சி செய்கிறான்.

பூர்வாப்யாஸேன தேனைவ ஹ்ரியதே ஹ்யவசோபி ஸ:
ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய சப்தப்ரஹ்மாதிவர்த்ததே 44

சீமான்கள் வீட்டு விஷயங்களில் ஈடுபட்டிருந்த போதிலும் முன்பிறவிப் பயிற்சியின் காரணமாக பகவத் பாதையின் பக்கம் ஈர்க்கப்படுகிறார்கள். யோகத்திலிருந்து தவறிய அந்த ஆர்வம் உடையவனும் சொல்லின் விஷயங்களைக் கடந்து நிர்வாண பதத்தை அடைகிறான். அந்நிலையை அடைய அவன் கைக்கொள்வது இவ்வழியே. ஒருவரும் ஒரே பிறவியில் அந்நிலையை அடைவதில்லை.

ப்ரயத்னாத்-யதமானஸ்து யோகீ ஸம்ஷீத்த-கில்பிஷ:
அனேக-ஜன்ம-ஸம்ஸித்தஸ்-ததோ யாதி பராம்கதிம் 45

பல பிறவிகளாக முயற்சி செய்யும் யோகி பரம சித்தியைப் பெறுகிறான். முயற்சியுடன் பயிற்சி செய்யும் யோகி எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுபட்டு பரம கதியையடைகிறான். அடைவதற்குரிய முறை இதுதான். முதலில் சிதைந்த முயற்சியுடன் இந்த யோகம் ஆரம்பமாகிறது. மனம் சஞ்சலம் அடையும்பொழுது பிறவி உண்டாகிறது. சத்குரு குலத்தில் நுழைகிறான். இப்படி ஒவ்வொரு பிறவியாகப் பயிற்சி செய்து பரம கதி, பரம பதம் என்ற நிலையை அடைகிறான். இந்த யோகத்தில் விதைக்கப்படும் விதை அழிவதில்லை என்று யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். நீங்கள் இரண்டடி எடுத்து வைத்தால் கூட அந்த அளவு சாதனையும் அழிவதில்லை. ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்து கொண்டே மனிதன் அவ்வாறு செய்ய முடியும். சூழ்நிலையின் காரணமாகவே மனிதன் அந்தச் சிறிதளவு சாதனை செய்ய முடிகிறது. ஏனெனில் அவனுக்கு முழுமையாகச் செய்ய சமயம் கிட்டுவதில்லை. நீங்கள் கறுப்பாக இருந்தாலும் சரி, சிவப்பாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தவிதமாக இருந்தாலும் சரி, கீதை என்னவோ எல்லோருக்கும் பொதுவானதொன்றாகும். நீங்கள் மனிதனாக இருந்தால் மட்டுமே உங்களுக்காக கீதை இயற்றப்பட்டது என்று கொள்ளலாம். கடும் முயற்சி செய்பவர் யாராயிருந்தாலும் அரைகுறை முயற்சி செய்பவன் கிரகஸ்தன் ஆவான். கீதை கிரகஸ்தன், துறவி, படித்தவன், படிக்காதவன், பாமரன் - பண்டிதன் ஆகிய அனைத்து மக்களுக்கும் பொதுவானது. ‘சாது’ என்ற பெயரில் உள்ள விசித்திரப் பிராணிக்காக மட்டும் இல்லை. இறுதியில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் அறுதியிட்டுக் கூறுகிறார்.

தபஸ்விப்ப்யோதிகோ யோகீ ஜ்ஞானிப்ப்யோபி மதோதிக:
கர்மிப்ப்யஸ்-சாதிகோ யோகீ தஸ்மாத் யோகீ பவார்ஜுன 46

தவசிகளில் யோகி சிறந்தவன். ஞானிகளை விட சிறந்தவனாகக் கருதப்படுகிறான். கர்மயோகியை விட யோகி சிறந்தவன். எனவே அர்ஜுனா ! நீ யோகியாக மாறு.

தபஸ்வி :

மனத்துடன் கூடிய புலன்களை அந்த யோகத்தில் ஒன்றிடச் செய்ய அவைகளைத் தவசி அடக்குகிறான். இதுவரை யோக நிலையை அவன் அடையவில்லை.

கர்மி :

நியமிக்கப்பட்ட கர்மத்தை அறிந்து அதில் ஈடுபடுபவன் கர்மி எனப்படுகிறான். தனது சக்தியை அறிந்து கொண்டோ, தன்னைப்

சமர்ப்பணமாக்கிக் கொண்டோ அவன் யோகத்தில் ஈடுபடுவதில்லை. கர்மங்களைச் செய்கிறான், அவ்வளவே.

ஞானி :

ஒரு ஞானமார்க்கி அந்த நியமிக்கப்பட்ட கர்மத்தை வேள்வியின் பலனை நன்கு அறிந்து தனது சக்திக்கேற்ப யோகத்தில் ஈடுபடுகிறான். தனது இலாப நஷ்டத்திற்குத் தானே பொறுப்பாளி ஆகிறான். அதில் கவனத்தை வைத்தபடி முன்னேறுகிறான்.

யோகி :

நிஷ்காம கர்மயோகி இஷ்ட தேவதையைப் பற்றிக்கொண்டு பரிபூரண சமர்ப்பணம் செய்யும் உணர்வுடன் அந்த நியமிக்கப்பட்ட கர்மமான யோக சாதனையில் ஈடுபடுகிறான். அதன் யோக க்ஷேமத்தின் பொறுப்பை பகவான் அல்லது யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்றுக் கொள்கிறார். தாழ்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை களிலும் தாழ்வைப் பற்றிய பயம் அவனுக்கு இருப்பதில்லை. ஏனெனில் அவன் பரம தத்துவத்தை விரும்புகிறான். அந்தப் பரம தத்துவமே அவனைக் காக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருப்பதால் சமாளிக்கிறான். தவசி யோக நிலையில் ஈடுபடத் தயாராகிறான். கர்மி கர்மத்தை அறிந்து அதனைச் செய்கிறான். இவர்கள் தவறவும் கூடும். ஏனெனில் இவர்களிடம் சமர்ப்பணம் செய்யும் உணர்வு இல்லை. தனது இலாப நஷ்டத்தைப் பார்க்கும் சக்தியும் இல்லை. ஞானிகள் யோகத்தின் சூழ்நிலைகளையும் தனது சக்தியையும் நன்கு அறிந்திருந்த போதிலும் அவைகளின் பொறுப்பை தானே ஏற்றுக் கொள்கிறான். நிஷ்காம கர்மயோகியோ அந்தப் பொறுப்பை இஷ்ட தேவதையின் மீது விட்டுவிட்டு அவர் காப்பாற்றுவார் என்று உறுதியாக நம்பி யோகத்தில் ஈடுபடுகிறான். இவர்கள் இருவருமே பரம நன்மை தரும் பாதையில் செல்கிறார்கள். ஆனால் இஷ்ட தேவதையைப் பற்றிக் கொண்டு அவனிடம் பொறுப்பை விட்டுவிட்டு நிம்மதியாகச் செயலாற்றுபவன் தான் சிறந்தவன். அவனையே பிரபு ஏற்றுக் கொள்கிறார். அவனது இலாப நஷ்டங்களைப் பிரபு பார்த்துக் கொள்கிறார். எனவே யோகிதான் சிறந்தவன். அர்ஜுனா! நீ யோகியாக மாறு! சமர்ப்பணம் செய்யும் உணர்வுடன் அனுஷ்டானம் செய்.

யோகி சிறந்தவன்; அதிலும் அந்தராத்மாவில் ஈடுபடும் யோகிதான் மிகவும் சிறந்தவன். இது பற்றி கூறுகிறார் :—

யோகினாமபி ஸர்வேஷாம் மத்கதேனாந்தராத்மனா
ச்ரத்தாவான் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத: 47

எல்லா நிஷ்காமகர்ம யோகிகளிலும் சிரத்தையுடன் அந்தராத்மாவினால் ஆன்ம சிந்ததைனயுடன் நிரந்தரமாக என்னை எவன்

வந்தனை செய்கிறானோ அந்த யோகிதான் என் கருத்துப்படி மிகவும் சிறந்தவனாவான். வந்தனை, காட்சிக்கோ ஆடம்பரத்திற்கோ உரிய பொருள் அல்ல. அதனால் சமுதாயத்திற்கு அனுகூலம் இருக்கலாம். ஆனால் பிரபுவுக்குப் பிரதிகூலமாகிவிடும். வந்தனை மிகவும் அந்தரங்கமானது. மறைவாக வைக்க வேண்டியது. அதன் ஏற்றமும் தாழ்வும் அந்தக்கரணத்திற்கு அப்பாற்பட்டது.

முடிவுரை :

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார் :

பலனில் பற்று வைக்காமல் செய்யத் தகுந்த காரியத்தை, உபாயத்தைச் சிந்திப்பவன் சன்யாசி ஆவான். அந்தக் கர்மத்தைச் செய்பவன்தான் யோகியும் ஆவான். செயல்கள் அல்லது அக்னியைத் தியாகம் செய்பவன் மட்டுமே சன்யாசி ஆகமுடியாது. சங்கல்பங்களைத் தியாகம் செய்யாமல் எவனும் சன்யாசியோ யோகியோ ஆக முடியாது. 'நாங்கள் சங்கல்பம் செய்வதில்லை'' என்று வாயால் கூறுவதால் மட்டுமே சங்கல்ப பிண்டம் நம்மை விடுவதில்லை. செய்யத் தகுந்த காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற ஆசையுடன் யோகத்தில் ஈடுபடுபவன், கர்மத்தைச் செய்து செய்து யோகத்தில் நிலைத்தவுடன்தான் சங்கல்பங்கள் மறைகின்றன. அதற்கு முன்பு அல்ல. எல்லா சங்கல்பங்களும் மறைவதுதான் சன்யாசமாகும்.

''ஆன்மா அதோகதியிலும் செல்ல முடியும், அதனைச் சீர் தூக்கவும் முடியும்'' என்று யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் மறுபடியும் கூறினார். எந்த மனிதன் மூலம் புலன்கள் வெல்லப் படுகின்றனவோ அவனுடைய ஆன்மா அவனுக்கு நண்பனாக இருப்பதுடன் நட்புடன் செயல்படுகிறது. அத்துடன் சிறந்த நன்மையையும் தருகிறது. எவன் புலன்களை வெல்ல முடியாமல் இருக்கிறானோ அவனுக்கு அவனுடைய ஆன்மா பகையாக மாறி விரோதத்துடன் செயல் படுகிறது. கஷ்டங்களுக்குக் காரணமும் ஆகிறது. எனவே மனிதன் ஆன்மாவை அதோகதியில் செல்லவிடாமல் தானே தனது ஆன்மாவைச் சீர்தூக்கிவிட வேண்டும்.

யோக நிலையை அடையும் யோகியின் வாழ்க்கை முறை 'வேள்வி செய்ய வேண்டிய இடம்', உட்காரும் ஆசனம், உட்காரும் முறை ஆகியவற்றைப் பற்றிக் கூறும்பொழுது, ''யோகிகள் இருக்கும் இடம் ஏகாந்தமாகவும், புனிதமாகவும், தூய்மையாகவும் இருக்க வேண்டும் என்றும் ஆசனம், உடை, மிருகங்களின் தோல், வெட்டிவேர்பாய் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்க வேண்டும்''. என்றும் கூறினார். கர்மத்திற்கேற்ற நடைமுறை பாவனை, உணவு, போக்குவரத்து, தூக்கம், விழிப்பு நிலை ஆகியவற்றில் கட்டுப்பாடு இருக்க வேண்டிய அவசியத்தை

அவர் வலியுறுத்துகிறார். யோகியின் கட்டுப்படுத்தப்பட்ட சித்தத்தை அவர் காற்றில்லாத இடத்தில் எரியும் நடுக்கமற்ற விளக்கிற்கு ஒப்பிட்டார். இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட சித்தம் எப்பொழுது ஒன்றி விடுகிறதோ அப்பொழுது அந்த யோகி உச்ச நிலையை, எல்லையில்லா ஆனந்தத்தை அடைகிறான். உலகில் உள்ள உறவு பிரிவற்ற நிலையின் எல்லையற்ற சுகத்தின் பெயர்தான் மோட்சமாகவும் — யோகத்தின் பொருள் அதனுடன் ஒன்றுதலும் ஆகும். எந்த யோகி அதில் ஒன்றுபடுகிறானோ அவன் எல்லாப் பிராணிகளிடத்தும் சமமான நோக்கு உடையவனாகிறான். தன் ஆன்மாவைப் போல் எல்லோருடைய ஆன்மாவையும் பார்க்கிறான். அவன் உச்ச கட்டத்தில் உள்ள சாந்தியைப் பெறுகிறான். எனவே யோகம் அவசியமாகும். மனம் எங்கெல்லாம் செல்கிறதோ அங்கிருந்தெல்லாம் அதனை மறுபடியும் மறுபடியும் இழுத்து கட்டுக்குள் வைக்க வேண்டும். மனம் எளிதில் தன் வயத்திற்குள் வருவதில்லை என்று யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணரே ஒப்புக் கொள்கிறார். ஆனால் அதை வயப்படுத்த முடியும் என்றும் ஸ்ரீ கிருஷ்ணர் ஒப்புக் கொள்கிறார். இது பயிற்சி, வைராக்கியம், மூலமே கட்டுக்குள் வருகிறது. அரைகுறை முயற்சி செய்யும் மனிதன் பல பிறவிகளில் பயிற்சி செய்து பரமகதி, பரமபதவி என்று சொல்லப்படும் நிலையை அடைகிறான்- தவசிகள், ஞானிகள் வெறும் செயல்கள் செய்பவர்களை விட யோகிகள் சிறந்தவர்கள். எனவே அர்ஜுனா! நீ யோகியாக மாறு. சமர்ப்பண உணர்வுடன் உள் மனத்துடன் ஒன்றி யோகத்தைக் கடைப்பிடித்து வா என்று இந்த அத்தியாயத்தில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் யோகத்தை அடைவதற்குரிய பயிற்சியை வலியுறுத்தினார்.

இப்படியாக ஸ்ரீமத் பகவத் கீதை என்ற உபநிடதமும், பிரம்ம வித்தையுமான யோக சாஸ்திர விஷயத்தைப் பற்றிய ஸ்ரீ கிருஷ்ணர் — அர்ஜுனனது உரையாடலில் ''அப்பியாச யோகம்'' என்ற ஆறாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது.

இதேபோன்று ஸ்ரீமத் பரமஹம்ச பரமானந்தரின் சீடரான சுவாமி அட்கடா நந்தர் இயற்றிய ஸ்ரீமத் பகவத் கீதையின் உரையான ''யதார்த்த கீதை''யின் ''அப்பியாச யோகம்'' என்ற ஆறாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது.